## பெரியார் அலை!

48-வது சென்னை புத்தகக் காட்சி இறுதிகட்டத்தை எட்டியுள்ளது. கடந்த சில ஆண்டுகளைப் போல இந்த ஆண்டும் பெரியார் குறித்த நூல்கள் இளைஞர்களைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றன. இதுதொடர்பாக செய்தி வெளியிட்டுள்ள ஆங்கில் நாளேடான டைம்ஸ் ஆஃப் இந்தியா '18 வயது முதல் 35 வயது வரையிலான இளைஞர்கள் பெரியார் புத்தகம் விற்பனை செய்யும் அரங்குகளை நோக்கி அதிகம் படையெடுக்கிறார்கள்' எனக் கூறியுள்ளது.

பெண் ஏன் அடிமையானாள்?, பெரியார் இன்றும் என்றும், பெரியார் ஒரு அறிவுக் கருவூலம், ஒப்பற்ற சிந்தனையாளர் பெரியார் போன்ற பல நூல்களை இளைஞர்கள் தேடித்தேடி வாங்கியுள்ளனர். சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம், கருஞ்சட்டைப் பதிப்பகம், திரவிடியன் ஸ்டாக், பெரியார் புக்ஸ்.காம், கருப்புப் பிரதிநிதிகள் உட்பட, பெரியாரியம் சார்ந்த நூல்களை மட்டுமே விற்பனை செய்யும் அரங்கங்களின் எண்ணிக்கையே பத்தைத் தொடும். ஒட்டுமொத்தமாக இந்த ஆண்டு சென்னை புத்தகக் காட்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட அரங்குகளில் பெரியார் தொடர்பான நூல்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பெரியாரைத் திட்டமிட்டு விமர்சிக்கும் கூட்டம் இருந்துகொண்டே இருந்தாலும், இளைய தலைமுறை அவரைத் தேடித்தேடி படிப்பது பெருகிக்கொண்டே இருக்கிறது. அதனால்தான் தனக்கு விளம்பரமே எதிரிகள்தான் என்றார் பெரியார். பெரியாரிய நூல்கள் அதிகம் விற்பனை ஆவது, அவருடைய கருத்துக்களுக்கும், கொள்கைக்கும் கிடைத்த வெற்றி மட்டுமல்ல, அந்த தேவை இன்னும் இருந்துகொண்டிருக்கிறது என்பதற்கான அடையாளம். கடந்த சில ஆண்டுகளாக வலுவாக வீசும் பெரியார் அலை, இன்னும் தணியவில்லை என்பதற்கான சான்றும் கூட.

## ஃப்ளாஷ்பேக்





மு.தம்பிதுரை

### பிரச்சாரத்தில் தலைவருடன்...

1989-ஆம் ஆண்டு அமைந்த கழக ஆட்சி கலைக்கப்பட்ட பின்னர், 1991-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கலைஞர் பிரச்சாரம் செய்ய, பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன். 130-வது வட்டம் மயிலை நொச்சிக்குப்பம், நொச்சிநகர் பகுதியில் பிரச்சாரம் செய்ய தடை விதிக்கப்பட்டதால், கலங்கரை விளக்கம் பகுதியில் மாட்டு வண்டியில் ஏறி நின்று, பிரச்சாரம் செய்தார் தலைவர் கலைஞர். பிரச்சாரத்தின்போது, தென்சென்னை நாடாளுமன்றக் கழக வேட்பாளரான அண்ணன் டி.ஆர். பாலு, மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் கவிஞர் நிர்மலா சுரேஷ் ஆகிய இவர்களுடன் வட்டச் செயலாளராக இருந்த நானும் தலைவருடன் உடன் நின்றேன்.

**– மு.தம்பிதுரை,**
**மாநில துணைச் செயலாளர், மீனவர் அணி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### தமிழ்நாடு!

1960-ஆம் ஆண்டு விடுதலையில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட பெரியார், "3 கோடி தமிழர்கள் வாழும் தமிழ்நாட்டிற்கு அதிகாரப்பூர்வமாகத் தமிழ்நாடு என்ற பெயர் இல்லையே என ஆதங்கப்பட்டார். தாய்த் திருநாட்டிற்கு 'தமிழ்நாடு' என்ற பெயரில்லையே என்று கொதிக்கும் உள்ளங்கொண்ட இளைஞர்களே! தோழியர்களே என்ற தனது அறிக்கையை வெளியிட்டிருந்தார். அதன்பிறகு 7 ஆண்டுகள் கழித்து பேரறிஞர் அண்ணா ஆட்சி அமைத்த பிறகே சென்னை மாகாணம் தமிழ்நாடானது

## சீரணி ⟹ இளைஞர் அணி

44

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் 'சீரணி முதல் இளைஞர் அணி வரை'...**

ஓவியம் : ரவி பேலட்

## பேரணியானது சீரணி!



பேரறிஞர் அண்ணா அவர்கள் சீரணியைத் தொடங்கியபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிரிகள் பலரும் 'சீரணி, சீக்கிரமாகச் சின்னாபின்னமாகும்' என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், அந்தச் சீரணி, முத்தமிழறிஞர் கலைஞரால் இளைஞர் அணித் திட்டமாக வளர்த்தெடுக்கப்பட்டு, தளபதி அவர்களால் **இளைஞர் அணி** என்ற கழக அணியாக வலுப்படுத்தப்பட்டு, இன்று இளைஞர் அணிச் செயலாளர் அவர்களால் மெருகேற்றப்பட்டு, சிகரத்தை அடையும் என்று அவர்கள் கனவிலும் நினைத்திருக்கவே மாட்டார்கள்.

இளைஞர் அணி நண்பர்களுக்கு, அவர் முதன்முதலில் போதித்த பாடம் என்னவென்றால், ஆங்கிலத்தில், 'டூ ஆர் டை' (*Do or Die*), அதாவது 'செய் அல்லது செத்துமடி' என்பார்கள். அதையே சிறிது மாற்றி, 'டூ அண்ட் டை' (*Do and Die*), அதாவது, 'தலைமை இடுகின்ற பணியைச் செய்து முடித்துவிட்டு மடிவோம்' என்பதுதான்.

அந்த வாசகத்தின்படி இன்றளவும், தலைமை ஆணையிடும் எந்தப் பணியாக இருந்தாலும், அந்தப் பணிகளில் தனிமுத்திரை பதித்து, அனைவரின் ஆதரவையும் பெற்று, தலைமையிடம் பாராட்டைப் பெறுகின்ற பெருமைமிக்க அணியாக இளைஞர் அணி வளர்ந்துகொண்டிருக்கிறது.

கழகம் தோன்றிய காலம் முதற்கொண்டு மிகப் பிரமாண்டமான ஊர்வலங்கள் பல நடத்தப்பட்டுள்ளன. அதில் மாவட்ட வாரியாக கழகத் தோழர்கள் அணிவகுப்பார்கள். 1972-ஆம் ஆண்டு அண்ணா பிறந்தநாள் ஊர்வலம் சென்னை மாவட்டக் கழகத்தின் சார்பாக மூலகொத்தளம் தொடங்கி, மெரினா கடற்கரையிலிருந்த சீரணியை அடைகின்ற ஊர்வலமாகப் புறப்பட்டது. இந்நிலையில், இளைஞர் அணி உருவாகி, தளபதி அவர்கள் அதன் செயலாளராகப் பொறுப்புக்கு வந்த 1983-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான், கழகம் நடத்திய ஊர்வலங்கள் எல்லாம் **'பேரணி'** என்று அழைக்கப்பட்டன.

இளைஞர் அணி ஓர் இராணுவக் கட்டுப்பாட்டோடு வரவேண்டும் என்பதற்காக முதலில் 500 இளைஞர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி கொடுத்து, வெண்சீருடை, வெள்ளை கேன்வாஸ் பூட்ஸ் ஆகியவை அணிந்து, இளைஞர் அணி முத்திரையைப் போல கழகக் கொடியைக் கையிலே பிடித்துக்கொண்டு அணி வகுத்து, தலைமைக்கு ஒரு 'சல்யூட்' அடிக்க வேண்டும் என்பன போன்ற முறைகள் எல்லாம் கற்றுக்கொடுக்கப்பட்டன.

இவ்வாறு, சீரணியைப் பேரணியாக்கி, திராவிட இயக்கத்தின் சிந்தனைகளையும் கொள்கைகளையும் அடுத்த தலைமுறைக்கும் நகர்த்திக் கொண்டே இருக்கிறார் நமது தலைவர். அவரிடமிருந்து பெற்ற பாரம்பரியத்தை எடுத்துக் கொண்டு, முன்னே சீறிப் பாய்கிறார் நமது இளைஞர் அணி செயலாளர் அவர்கள். ஆம்... சீரணி முதல் இளைஞர் அணி வரை என்பது ஒரு கட்சியின் திட்டமல்ல... நூற்றாண்டு கண்ட இயக்கத்தின் தொடர் ஓட்டம்..!

**...நிறைவடைந்தது.**

### இது இளைஞர் அணிக்கு கலைஞர் தந்த ஆத்திச்சூடி..!

அண்ணா வழி நில்!
ஆற்றுக பொதுப்பணி!
இலக்கியம் புதுக்கிடு!
ஈனரை ஒதுக்கிடு
உயிர் தமிழாம் உணர்ந்திடு
ஊழலை நொறுக்கிடு
எட்டப்பர் இகழ்ந்திடு!
ஏறுபோல் வீறுகொள்!
ஐயம் களைந்து அறிவைப் பயிர் செய்!
ஒழுக்கம் போற்றிடு!
ஓம்புக மெலியோரை!
ஔவைக்குலம் போற்று!
கழகம் வில்லாம் நின் அணியே கணையாம்
சாதியை விடுத்து சமத்துவம் முழங்கு!
ஞாயிறு வாழ்த்தி, நாளும் உழைத்திடு!
தனியுடைமை தகர்த்திடத் தடந்தோள் தட்டு
நாடு வாழ நலிவு தீர்த்திடு!
பகைவர்க்கு வளையேல்!
மாயைக்கு மயங்கேல்!
வாய்மையே போர்வாள்!
யானை போல் பயன்படு!
'ழ'கரமாய்ச் சிறப்புறு!

## பொய்ப்பெட்டி

44

**கோவி.லெனின்**

**"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."**



## சுட்டுவிரலை நீட்டும் முன் யோசித்தார்களா?

***தமிழ்நாட்டில் போராட்டமே நடத்தக் கூடாது என்று தி.மு.க. அரசு தடுப்பதாக அ.தி.மு.க, பா.ஜ.க. கட்சிகள் குற்றம்சாட்டுகின்றனவே?***

ஆக்ஸ்போர்ட் யுனிவர்சிட்டிக்குப் போய் அரசியல் பயிற்சி எடுத்து வந்தவர், தன்னைத் தானே சாட்டையால் அடித்துக்கொண்டு, போராட்டம் நடத்தியது எந்த நாட்டிலாம்? அவருடைய கட்சிக்காரர்கள் மதுரையில் மகளிர் அணியினரை முன்னிறுத்திப் போராட்டம் நடத்தி, அதற்கு வாடகை ஆளாக 'கண்ணகி' வேடம் அணிந்த நாட்டுப்புறக் கலைஞரை அழைத்து வந்து, கைது நடவடிக்கையின்போது, அந்த நாட்டுப்புறக் கலைஞர் கண்ணீர் வடித்து, தனக்கும் போராட்டத்திற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னது நேரலையாக ஒளிபரப்பானதே!

அ.தி.மு.க தரப்பில் 'மெயின் ரோடு' புகழ் ஜெயக்குமார் தலைமையில் போராட்டம் நடத்தப்பட்டதே! தி.மு.க அரசுக்கு எதிராகத் தொடர்ந்து போராட்டங்கள் நடத்திக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் நடத்தும் போராட்டங்கள் எதுவும் மக்களிடம் எடுபடுவதில்லை. காரணம், அவற்றில் நியாயமான காரணம் இல்லை.

எந்தவொரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டாலும், அதன் உண்மைத்தன்மையை அறிந்து, உரிய நடவடிக்கை எடுக்கக்கூடியதாக திராவிட மாடல் அரசு இருக்கிறது. எந்த ஒரு பிரச்சினைக்கும் பொறுப்பேற்றுக் கொள்ளக்கூடிய முதலமைச்சரும் துணை முதலமைச்சரும் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். எதுவும் தெரியாது என்றோ, டி.வி. பார்த்துத்தான் தெரிந்துகொண்டேன் என்றோ சொன்ன முந்தைய முதலமைச்சர்களின் காலம் முடிந்துவிட்டது.

மக்களின் பிரச்சினைகளை நேரடியாக அணுகக்கூடிய, இயற்கைச் சீற்றங்களின்போது மக்களோடு மக்களாக நிற்கக்கூடிய, மக்களின் கோரிக்கை மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய திராவிட மாடல் ஆட்சி, தமிழ்நாட்டில் நடைபெறுவதால், காரணங்களை வலியத் தேடி எதிர்க்கட்சிகள் நடத்துகின்ற போராட்டங்கள், அந்தக் கட்சிகள் எதிர்பார்க்கும் அரசியல் பலனைத் தருவதில்லை. அந்தக் கோபத்தில்தான், போராட்டங்களை நடத்தவிடாமல் தி.மு.க அரசு தடுப்பதாக அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் வீண் குற்றச்சாட்டை முன்வைக்கின்றன.

**காரணங்களை வலியத் தேடி எதிர்க்கட்சிகள் நடத்துகின்ற போராட்டங்கள், அந்தக் கட்சிகள் எதிர்பார்க்கும் அரசியல் பலனைத் தருவதில்லை.**

டெல்லியில் போராட்டம் நடத்திய விவசாயிகளையும், தூத்துக்குடியில் போராட்டம் நடத்திய மக்களையும் பா.ஜ.க. அரசும் அ.தி.மு.க அரசும் எப்படியெல்லாம் அடக்கி ஒடுக்கின என்பதற்கான வீடியோ ஆதாரங்கள் இப்போதும் இணையதளங்களில் நிறைந்துள்ளன.

இரண்டு கட்சியினருக்கும் மனசாட்சி என ஒன்று இருந்தால், அவற்றைப் பார்த்து விட்டு, பிறகு தி.மு.க. அரசை நோக்கி சுட்டுவிரலை நீட்டட்டும்.

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

716

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131